கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

# EDUS 4102 Comparative Education
## (ஒப்பீட்டுக் கல்வி)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

11 MAY 2015

விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.

01.(அ) இன, சமய ரீதியான காரணிகள் ஒப்பீட்டுக் கல்வியைப் பெறுவதில் எத்தகைய செல்வாக்கினைப் பெறுகின்றன என்பதை சில நாடுகளை முன்னுதாரணமாகக் கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) ஒப்பீட்டுக் கல்வியைக் கற்பதன் மூலம் ஏற்படும் பயன்பாடுகளைக் கல்வி அபிவிருத்தியுடன் தொடர்புபடுத்தி பரிசீலனை செய்க.

(10 புள்ளிகள்)

02.(அ) இலங்கையின் பண்டைக் காலக் கல்வி அமைப்பில் உயர்கல்வி வழங்கிய "பிரிவேனாக்கள்" பற்றிய சான்றாதாரங்களை முன்வைப்பதுடன் அவை கல்வியில் ஏற்படுத்திய மாற்றங்களையும் ஆராய்க?

(10 புள்ளிகள்)

(ஆ) அந்நியராட்சிக் காலத்தில் இலங்கையில் கல்விப் பணியாற்றிய சமயக் குழுக்களைக் குறிப்பிடுவதுடன் அவை, ஆற்றிய கல்விப் பணிகள் கல்வி வளர்ச்சிக்கு எவ்வாறு துணை நின்றன என்பதை பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(15 புள்ளிகள்)

03.(அ) பின்வரும் கல்வி இலக்குகளை கோல்புறூக் ஆணைக்குழு மற்றும் மோர்கன் குழுவினாரின் விதப்புரைகளுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(i) கல்வியை பொதுமக்களுக்கு விரிவுபடுத்தல்

(ii) பெண்களுக்கு கல்வி வாய்ப்பு வழங்கல்

(iii) நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கல்வியின் பங்கு

(3 x5=15 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் ஒல்லாந்தரின் படையெடுப்பினது பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுவதுடன் அவை எவ்வாறு இலங்கையின் கல்வி முறையில் பிரதிபலித்தன என்பதை உதாரணங்கள்மூலம் பரிசீலனை செய்க.

(10 புள்ளிகள்)

04.(அ) பிரித்தானியர் கால மத்திய பாடசாலை ஆணைக்குழுவின் சாதனைகள் எவ்வாறு பிற்கால கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமாயிற்று என்பதனை விளக்குக.

(13 புள்ளிகள்)

(ஆ) 1972ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற கல்விச் சீர்திருத்தங்களைப் பட்டியற்படுத்துவதுடன் அவற்றினால் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி நிலையைச் சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

05.(அ) ஒரு நாட்டின் அரசியல் ஆட்சி முறையானது அந்நாட்டின் கல்வி முறையில் தாக்கத்தைச் செலுத்துகின்றது என்பதனை இலங்கையின் கல்வி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் தொழிற்கல்விக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தினை இலங்கையில் பின்பற்றுவதற்குத் தடையாக அமையும் காரணிகளைப் பரிசீலனை செய்க.

(10 புள்ளிகள்)

06.(அ) அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கல்வி அமைப்பில் அந்நாடுகளின் அரசாங்கங்களின் பங்களிப்பினை நடைமுறை உதாரணங்கள் காட்டி விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்னைய தசாப்தங்களில் இலங்கையின் உயர் கல்வித்துறை பெற்ற வளர்ச்சி நிலையை பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து ஆராய்க.

(15 புள்ளிகள்)

******